# பயனர் கையேடு



CDMS

## *விற்பனை மேலாளர்*

*விற்பனை மேலாளருக்கான செயலி கீழ்கண்ட நடைமுறைகள் தன்னிச்சையாக நடைபெறுவதற்கான தளத்தை தருகிறது*

| | | |
|---|---|---|
| 1.**தொடர்ப்பு மேலாண்மை** | 2. **தொடர் நடவடிக்கை** | 3. **இலக்கு மறுஆய்வு** |
| 4. **விற்பனை மேலாண்மை** | 5.*விலைச்சிட்டை* | 6.Stock Transfer |

### செயலியை நிறுவ தேவையானவை:


- ஆண்ட்ராய்ட் 4.4-க்கு பிந்தைய வடிவுரு
  செயலியை நிறுவுவது எப்படி?


ஸ்வராஜ் சிடிஎம்எஸ் செயலியை பிளே ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்யவும் → இன்ஸ்டால் விசையை கிளிக் செய்யவும் → 'திற' விசையை கிளிக் செய்யவும்


1. *பிளே ஸ்டோரில் உள்ள கட்டை நிறுவுங்கள்.* (புதிய கட்டை நிறுவும் முன் முந்தைய கட்டுகளை முழுமையாக நீக்கிவிடுங்கள்.)


2. முக்கிய தகவல்கள் ஏற்றப்படும்போது இடையூறுகள் இல்லாமல் இருப்பதை உறுதிசெய்யுங்கள். அதாவது மற்ற செயலிகளுக்கு செல்லுதல், செயலியை மூடுதல்(பின்னணியிலிருந்து செயலியைநீக்குவது), இணையத் தொடர்பு தடைபடுதல் போன்றவற்றை தவிருங்கள்.


3. கீழ்காணும் ஏழு தெரிவுகளுக்கும் அனுமதி அளியுங்கள்:






















- செயலி உள்நுழைவு பக்கத்திற்கு இட்டுச் செல்லும்.

*செயலியை நிறுவும்போது சில அனுமதிகளை மறுத்திருந்தால் அவற்றை அமைப்புகள் பக்கத்தில் மாற்றிக்கொள்ளலாம்.*

செட்டிங்கஸ் → ஆப் மேனேஜ்மெண்ட் → CDMS → பெர்மிஸன்ஸ்

## விற்பனை மேலாளர் செயல்முறை பாய்வு







**1.**முகப்புத் திரை




**2.** பட்டி




**3.**நிர்வாக மையம்

## உள்நுழைதல்


*டீலர் உள்நுழைவு அடையாளத்தை உருவாக்குவார்.*


- முன்பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணை பயன்படுத்தி விற்பனை மேலாளர் புகுபதிகையை செய்வார். .
- எண் பதியப்பட்ட/உள்ளீடு செய்யப்பட்ட பின் குறுஞ்செய்தி மூலம் பெறப்படும் ஒடிபியை, செயலி தன்னிச்சையாக எடுத்துக்கொள்ளும். விற்பனை மேலாளர் ஒடிபியை கைமுறையாகவும் உள்ளீடு செய்யலாம்.
- கோரிக்கை வைக்கப்பட்டு 2 நிமிடங்களுக்குள் ஒடிபி உள்ளீடு செய்யப்படவேண்டும்..
- விற்பனை மேலாளார் ஒடிபி வந்திராவிட்டால், அவர் குறுஞ்செய்தி மூலம் ஒடிபியை அனுப்பும்படி கோரலாம், அதே அலைபேசி எண்ணுக்கு ஒடிபி அனுப்பிவைக்கப்படும்.
- ஒடிபி சரிபார்க்கப்பட்ட பின்னர் (ஒருமுறை மட்டும்), விற்பனை மேலாளர் செயலியை பயன்படுத்த முடியும்.
- ஒடிபி சரிபார்க்கப்பட்ட பின்னர், விற்பனை மேலாளர் செயலியை பயன்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது.


உள்நுழைவு பக்கம்

அலைபேசி எண்ணை உள்ளீடு செய்யவும்


ஒடிபியை உள்ளீடு செய்க








ஒடிபியை மீண்டும் அனுப்பவும் (கிடைக்காவிட்டால்)




ஒடிபி சரிபார்ப்பு




மையங்களையும் தரவுகளையும் ஏற்று




- உள்நுழையும் நேரத்தில், ஆர்சிஎன்எம் தொடர்பான அனைத்து முக்கியத் தகவல்கள் மற்றும் பரிவர்த்தனை விவரங்கள் ஏற்றப்படும்..
- உள்நுழைந்த பின்னர் அடுத்த வேலைக்கு செல்வதற்கு முன் தரவுகளை ஒத்திசைவு செய்துகொள்ளுங்கள்.

பட்டி

விற்பனை மேலாளரின் செயலி வெற்றிகரமாக உள்நுழையும்போது, கீழ்கண்ட அமசங்களுடன் முகப்பு பக்கம் தெரியும்:

தொடர்பு மேலாண்மை

தொடர்பு மேலாண்மையில் கீழ்கண்ட வில்லைகள் இருக்கும்:

- **புதிய தொடர்பு**: ஒரு வாடிக்கையாளரின் விவரங்களை தொடர்பு படிவத்தில் பூர்த்தி செய்வதன் மூலமோ, குரல் தொடர்பு மூலமோ விற்பனை மேலாளரால் ஒரு புதிய தொடர்பை உருவாக்க முடியும்.

- **என் தொடர்புகள்**: என்பிசிசி தயாரிப்பின் போது பூர்த்தி செய்யப்பட்ட வாடிக்கையாளர்கள் விவரம் இதில் இடம்பெறும்.


- **தொடர்புகள் ஒதுக்கீடு**: ஒதுக்கீடு செய்யப்பட்ட தொடர்புகள் காட்சிப்படுத்தப்படும்

- **விற்பனையாளார் தொடர்புகள்:** விற்பனையாளார்களால் உருவாக்கப்பட்ட தொடர்புகள் (என்பிசிசி) காட்டப்படும்.

- **இலக்குகள் ஒதுக்கீடு மற்றும் ஆய்வு:** விற்பனை மேலாளார் இங்கிருந்து இலக்குகளை ஒதுக்கீடு செய்வதுடன் அவற்றை மறுஆய்வு செய்யவும் முடியும்.

- **தொடர் நடவடிக்கைகள்**: தொடர் நடவடிக்கை எடுக்கவேண்டிய வாடிக்கையாளார் தொடர்புகள் அனைத்தும் இங்கு காணப்படும்.

- தொடர்பை மூடுதல்**:** இந்த வாய்ப்பை பயன்படுத்து விற்பனை மேலாளாரால் டொடர்புகளை மூட முடியும்.


விற்பனை மேலாளார்
தொடர்பு மேலாண்மை
விற்பனை மேலாண்மை
பிரோடெக்ட் ஃபேப்
புதிய தொடர்புகள்
எனது தொடர்புகள்
ஒதுக்கப்பட்ட தொடர்புகள்
விற்பனையாளர் தொடர்புகள்
இலக்குகளை நிர்ணயித்து ஆய்வு செய்தல்
தொடர் நடவடிக்கைகள்
தொடர்புகளை மூடிக்கொள்ளவும்
விற்பனை விதிமுறைகள்
விலைச்சிட்டை
கையிருப்பு இடமாற்றம்
தொகுப்புகள்

## புதிய தொடர்புகள்

விற்பனை மேலாளர் இரண்டு முறைகளை பின்பற்றி ஒரு புதிய தொடர்பை உருவாக்க முடியும் -


- தொடர்பு படிவம்
- குரல் தொடர்பு

தொடர்பு படிவத்தை பூர்த்தி செய்வது அல்லது ஒரு குரல் குறிப்பை பதிவு செய்வதன் மூலம் விற்பனை மேலாளர் ஒரு புதிய தொடர்பு விவரத்தை உருவாக்க முடியும்.

### தொடர்பு படிவம்


வாடிக்கையாளர்களிடமிருந்து தகவலை பெற்று அவர்களுக்கா விற்பனை மேலாளார் படிவத்தை பூர்த்தி செய்வார்.

**1.தொடர்பு மேலாண்மையை கிளிக் செய்யவும்- புதிய தொடர்பை கிளிக் செய்யவும்- தொடர்பு படிவத்தை கிளிக் செய்யவும்**





**2.கட்டாய புலங்கள் மற்றும் விவரங்களை பூர்த்தி செய்யவும்**

**சமர்ப்பி விசையை கிளிக் செய்யவும்**







**3.எச்சரிக்கை செய்தியில் ஆம் என்ற தெரிவை கிளிக் செய்யவும்**



## குரல் தொடர்பு

*குரல் பதிவு மூலம் வாடிக்கையாளர் விவரங்களை பதிவு செய்வதற்கு விற்பனை மேலாளருக்கு இருக்கும் வாய்ப்பு. (நேரத்தை மிச்சப்படுத்தவே குரல் பதிவு செய்யப்படுகிறது)*

*ஒரு புதிய குரல் தொடர்பை உருவாக்குவதற்கான வழிமுறை -*

| | | |
|---|---|---|
| 1.**தொடர்பு மேலாண்மையை கிளிக் செய்யவும்**<br>**புதிய தொடர்பை கிளிக் செய்யவும்**<br>**குரல் தொடர்பை கிளிக் செய்யவும்** | 2.**தொடர்பு பதிவை தொடங்கு-ஐ கிளிக் செய்யவும்** | 3.**நிறுத்து விசையை கிளிக் செய்யவும்**<br>**பதிவேற்றம் விசையை கிளிக் செய்யவும்** |
|  |  |  |

## எனது தொடர்புகள்

விற்பனை மேலாளராக உருவாக்கப்பட்ட அனைத்து தொடர்புகளும் எனது தொடர்புகள் பகுதியில் இடம்பெறும்

எனது தொடர்புகளை பார்ப்பதற்கான வழிமுறை:



- தொடர்பு மேலாண்மையை கிளிக் செய்யவும்
- எனது தொடர்புகளை கிளிக் செய்யவும்

எனது தொடர்புகளில் கீழ்கண்ட புலங்கள் காட்டப்படும் -

- நாள்காட்டி:இதிலிருந்து, இதுவரையை கிளிக் செய்து அந்த குறிப்பிட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட தொடர்புகளை காணலாம்
- **ஹாட்** +: அழைப்பு மையத்தால் ஒதுக்கப்பட்ட தொடர்புகளை காண ஹாட்+-ஐ கிளிக் செய்யவும்
- **ஹாட்**: வழங்கவேண்டிய தேதி *(0-30)* நாள்களுக்குள் உள்ளவற்றை ஹட்-ஐ கிளிக் செய்து பார்க்கலாம்.
- **வார்ம்**: வழங்கவேண்டிய தேதி (31-60)நாட்களுக்குள் இருப்பதை காண வார்ம்-ஐகிளிக் செய்யவும்.
- **கோல்ட்:** வழங்கவேண்டிய தேதி *(>60)* நாட்களுக்குப் பிறகு இருப்பவற்றை காண கோல்டை கிளிக் செய்யவும்
- **ஆல்:** ஹாட்+, ஹாட். வார்ம், மற்றும் கோல்ட் என அனைத்து தொடர்புகளையும் காண ஆல்-ஐ கிளிக் செய்யவும்

வழங்கவேண்டிய தேதியை பொறுத்து, ஒவ்வொரு தொடர்பும் ஹாட்/வார்ம்/கோல்ட் என தன்னால் மாற்றப்படுகிறது.

விற்பனை மேலாளர் ஒரு புதிய தொடர்பை எனது தொடர்புகள் டேபில் இருந்தும் உருவாக்க முடியும். என்னுடைய தொடர்புகள் மூலம் ஒரு புதிய தொடர்பை உருவாக்கும் வழிமுறை

| 1. தொடர்புகள் மேலாண்மையை கிளிக் செய்யவும் எனது தொடர்புகளி கிளிக் செய்யவும் | 2.எனது தொடர்புகள் திரையில் இருக்கும் சேர் விசையை கிளிக் செய்யவும் |
|---|---|
|  |  |

SWARAJ

**ஒதுக்கப்பட்ட தொடர்புகள்**

ஒதுக்கப்பட்ட தொடர்புகளை விற்பனை மேலாளர் பார்க்கமுடியும்.


ஒதுக்கப்பட்ட தொடர்புகளை காணும் வழிமுறை:

- தொடர்புகள் மேலாண்மையை கிளிக் செய்யவும்
- ஒதுக்கப்பட்ட தொடர்புகளை கிளிக் செய்யவும்

ஒதுக்கப்பட்ட தொடர்புகளில் கீழ்கண்ட புலங்கள் காட்டப்படும் -

- **ஹாட்** +: அழைப்பு மையத்தால் ஒதுக்கப்பட்ட தொடர்புகளை காண ஹாட்+-ஐ கிளிக் செய்யவும்
- **ஹாட்**: வழங்கவேண்டிய தேதி *(0-30)* நாள்களுக்குள் உள்ளவற்றை ஹட்-ஐ கிளிக் செய்து பார்க்கலாம்.
- **வார்ம்**: வழங்கவேண்டிய தேதி (31-60)நாட்களுக்குள் இருப்பதை காண வார்ம்-ஐகிளிக் செய்யவும்.
- **கோல்ட்:** வழங்கவேண்டிய தேதி *(>60)* நாட்களுக்குப் பிறகு இருப்பவற்றை காண கோல்டை கிளிக் செய்யவும்
- **ஆல்:** ஹாட்+, ஹாட். வார்ம், மற்றும் கோல்ட் என அனைத்து தொடர்புகளையும் காண ஆல்-ஐ கிளிக் செய்யவும்

வழங்கவேண்டிய தேதியை பொறுத்து, ஒவ்வொரு தொடர்பும் ஹாட்/வார்ம்/கோல்ட் என தன்னால் மாற்றப்படுகிறது.ஒதுக்கப்பட்ட தொடர்புகளை பயன்படுத்தி விற்பனை மேலாளர் புதிய தொடர்புகளை உருவாக்கலாம்.





ஒதுக்கப்பட்ட தொடர்புகள் மூலம் ஒரு புதிய தொடர்பை உருவாக்கும் வழிமுறை

- தொடர்பு மேலாண்மையை கிளிக் செய்யவும்
- ஒதுக்கப்பட்ட தொடர்புகளை கிளிக் செய்யவும்
- ஒதுக்கப்பட்ட தொடர்புகள் திரையில் உள்ள செர் விசையை கிளிக் செய்யவும்.

## விற்பனையாளர் தொடர்புகள்

விற்பனையாளரின் தொடர்புகளை காண பின்வரும் நடைமுறையை பின்பற்றவும் -

விற்பனையாளர்கள் உருவாக்கிய அனைத்து தொடர்புகளும் காட்டப்படும். ஒவ்வொரு விற்பனையாளரின்நிலை குறித்து சோதிக்க முடியும் .

| 1.தொடர்பு மேலாண்மையை கிளிக் செய்யவும்<br>விற்பனையாளார் தொடர்பை கிளிக் செய்யவும் | 2. விற்பனையாளரின் பெயரை கிளிக் செய்து அவரைப் பற்றிய தகவல்களை தெரிந்துகொள்ளலாம் |
| --- | --- |
|  |  |





தொடர்புகள் அவற்றின் நிலையை பொறுத்து பிரிக்கப்படுகின்றன:

(ஹாட்+/ஹாட்/ வார்ம்/கோல்ட்.)

விற்பனையாளாரின் தொடர்புகள் தேதியை உள்ளீடு செய்வதன்மூலம் தேடமுடியும்.


விற்பனையாளர் தொடர்பில் பின்வரும் புலன்கள் திரையில் தோன்றுகின்றன -


- வாடிக்கையாளர் பெயர்
- முகவரி
- விற்பனையாளர் பெய்
- வழங்கப்பட்டதன் நிலை
- தொடர்பு உருவாக்கப்படது
- வழங்கப்படுவது எதிர்பார்க்கப்படும் நாள்

## இலக்குகள் ஒதுக்கீடு மற்றும் மறுஆய்வு

இலக்கு மறுஆய்வில் கீழ்கண்ட தகவல்கள் தன்னால் சேகரிக்கப்படுகின்றன -

- விற்பனையாளரின் பெயர்
- முகவரி
- விற்பனையாளர்களின் சேர்ப்பிப்பு இலக்கு
- ஹாட் விசாரிப்பு இலக்கு
- ஹாட் விசாரிப்புகளை திறப்பது





## தொடர் நடவடிக்கைகள்


ஒரு தொடர்புக்கு "தொடர் நடவடிக்கை சேர்"மூலம் விற்பனை மேலாளர் சேர்க்கலாம்.

தொடர் நடவடிக்கைகளை பார்ப்பதற்கான முறை

| **தொடர்பு மேலாண்மையை கிளிக் செய்யவும்** | **தொடர் நடவடிக்கைகள் கிளிக் செய்யவும்** |
|---|---|
|  |  |

தொடர் நடவடிக்கை வரலாறு

ஒவ்வொரு தொடர் நடவடிக்கை தேதியின்போது கூடுதல் தகவல்களை சேர்ப்பதற்காக ஒரு உரை புலம் அளிக்கப்படும்.





## தொடர்புகளை நிறைவு செய்



தொடர்புகளை விற்பனை மேலாளார் நிறைவு செய்யலாம்.
கீழ்கண்ட சூழல்களில்தொடர்பை விற்பனை மேலாளர் முடிவுக்கு கொண்டுவரலாம்:

- வாடிக்கையாளர் வேறொரு விற்பனையாளரிடமிருந்து பொருள் வாங்கிருந்தால்.
- அவர் வேறு நிறுவனத்திடமிருந்து ஒரு பழைய டிராக்டரை வாங்கியிருந்தால்.
- விற்பனையாளர்களுக்கு ஒதுக்கப்படும் தொடர்புகளையும் மூடும் உரிமை விற்பனை மேலாளார்களுக்கு உள்ளது.

தொடர்பை முடித்துக்கொள்ளும் விசையை கிளிக் செய்தால் கீழ்காணும் விரிவான தகவல்கள் இருக்கும்:

- வாடிக்கையாளர் பெயர்*
- கிராமம்*
- மாடல்*
- தொடர்பு தேதி
- வழங்கும் தேதி குறித்த எதிர்பார்ப்பு
- முடிவு பட்டியில் கீழ்கண்ட தெரிவுகள் இருக்கும்:
    - போட்டியாளர் வாகனம் வாங்கப்பட்டது
    - முடிவு நிலுவையில் உள்ளது
    - பழைய டிராக்டர் வாங்கப்பட்டது

தொடர்பு முடிவை பார்ப்பதற்காக வழிமுறை -

| **தொடர்பு மேலாண்மையை கிளிக் செய்யவும்** | **தொடர்பு முடிவை கிளிக் செய்யவும்** |
|---|---|
|  |  |

விற்பனை விதிமுறைகள்

என்பிசிசியை பயன்படுத்தி விற்பனை விதிமுறையை உருவாக்குவோம்


என்பிசிசியை பெயர், கிராமம், அலைபேசி எண் உள்ளிட்டவை கொண்டு கண்டறிய ஸ்மார்ட் தேடல் வசதி உள்ளது.

விற்பனை விதிமுறையை உருவாக்க கீழ்கண்ட நடைமுறையை பின்பற்றவும்:


- "சேர்" விசையை கிளிக் செய்யவும்
- ஒரு என்பிசிசியை தேர்வு செய்யவும் (விற்பனை மேலாளர், விற்பனையாளர் மற்றும் ஆர்சிஎன்எம் ஆகியோரால் உருவாக்கப்பட்ட என்பிசிசி இங்கு இருக்கும்)

விற்பனை விதிமுறை கீழ்கண்டவாறு இருக்கும், அவற்றில் அனைத்து கட்டாயத் தகவல்களையும் பூர்த்தி செய்யுங்கள்:


**பொது (வாடிக்கையாளர் குறித்த பொதுவான தகவல் இடம்பெற்றிருக்கும்)**





**டிராக்டர் (இதில் புதிய மற்றும் மாற்றப்படும் டிராக்டர் குறித்த தகவல்கள் இருக்கும்)**




**துணைப் பொருட்கள் (துணைப்பொருட்களை இங்கிருந்து சேருங்கள்)**




செலுத்தல் (செலுத்தல் தொடர்பான தகவல்களை இங்கு சேர்க்கவும்)




விற்பனை விதிமுறைகளை உருவாக்க தொடர் விசையை கிளிக் செய்யவும்.

## ஒதுக்கீடு

டிராக்டர் ஒதுக்கீட்டிற்கு பின்வரும் வழிமுறையை பின்பற்றவும்:

- க்யுஆர் கோடை ஸ்கேன் செய்யுங்கள் அல்லது சேஸி எண்ணை உள்ளீடு செய்யுங்கள்
- சரிபார்பு காட்சி சேஸி எண்ணை ஸ்கேன் செய்யுங்கள் அல்லது சேஸி எண்ணை உள்ளீடு செய்யுங்கள்
- சேஸி எண், மாடல் எண், சீரியல் எண், வண்ணம் ஆகியவற்றை காட்டுங்கள்
- நிறுவுபவர் பெயர் – பட்டியலிலிருந்து தேர்வு செய்யுங்கள்
- டிராக்டரின் படத்தை சேருங்கள் – பல படங்கள் சேர்க்கப்படலம் (சேர்க்கப்பட்ட பின்னர் அவற்றை பார்வைக்கு வையுங்கள்)
- ஒதுக்கப்பட்ட டிராக்டரை நீக்கிவிட்டு புது டிராக்டர் ஒதுக்கீடு செய்வதற்கு வாய்ப்பு.





## வழங்குதல்

- "விலைச்சிட்டை தயாரியுங்கள்" என்ற நிலையில் உள்ள தொடர்பை கிளிக் செய்யுங்கள்.
- பயனர் இரண்டு வகையான விலைச்சிட்டை தயாரிக முடியும்:
    - வாங்குபொருள் விலைபட்டி(மாற்றக்கூடியது)
    - விலைச்சிட்டை (மாற்றமுடியாதது)
- தேவையான தகவல்களை பூர்த்தி செய்து "விலைசிட்டையை உருவாக்கவும்" என்கிற விசையை கிளிக் செய்யவும்.
- கீழ்கண்ட தெரிவுகளைப் பெற "அச்சிடு விசையை" கிளிக் செய்யவும்:
    - மின்னஞ்சல் அனுப்பவும்
    - பிடிஎஃபாக சேமி

## விலைச்சிட்டை

டிராக்டர் விலைச்சிட்டை மற்றும் இருப்பு இடமாற்ற விவரப்பட்டி இங்கு காட்டப்படும்: தயாரிக்கப்பட்ட அல்லது நிலுவையிலுள்ள விலைச் சிட்டையை விற்பனை மேலாளர் தெரிவு செய்யலாம்.







## இருப்பு இடமாற்றம்

விற்பனை மேலாளர் இருப்பு இடமாற்றத்திற்கு கீழ் கண்டவற்றுள் தேர்வு செய்யலாம்:

- டீலரிடமிருந்து டீலருக்கு (டீலரிடமிருந்து டீலருக்கு இருப்பு இடமாற்றம்)
- காட்சி அரங்கிலிருந்து கிளைக்கு (காட்சி அரங்கிலிருக்கும் இருப்பை சொந்த கிளைக்கு மாற்றம் செய்வது)
- கிளையிலிருந்து காட்சி அரங்கிற்கு (சொந்த கிளையிலிருந்துஇருப்பை சொந்த காட்சி அரங்கத்திற்கு மாற்றம் செய்வது)
- கிளையிலிருந்து கிளைக்கு (சொந்த கிளையிலிருந்து மற்ற கிளைக்கு மாற்றுவது)




## வசூல்

வசூலில் கிழ்கண்ட தகவல்கள் இடம்பெறும்:

- ரசீது எண் *
- ரசீது தேதி *
- ரசீது தொகை *
- மீதி செலுத்தவேண்டியத் தொகை *
- செலுத்தும் முறை *- ரொக்கம்/அட்டை/காசோலை



## பிரோடக்ட் ஃபேப்

ஸ்வராஜ் மற்றும் டீலர் தரும் வீடியோக்கள் மற்றும் கையேடுகளை பிரோடக்ட் ஃபேப் அளிக்கும்.


- வீடியோக்கள்
- கையேடுகள்

## வீடியோக்கள்

வீடியோக்களுக்கான லிங்குகள் வழங்கப்படும். தேவையான வீடியோவுக்கான லிங்கை கிளிக் செய்தால் செயலியிலேயே வீடியோ திறக்கப்படும்.

வீடியோக்களை காண கீழ்கண்ட நடைமுறையை பின்பற்றவேண்டும் -


- முகப்பு பக்கத்தில் பிரோடக்ட் ஃபேப்பை கிளிக் செய்வதன் மூலம் இரண் உப தெரிவுகள் கிடைக்கும்.
- இவற்றில் வீடியோஸ்-ஐ கிளிக் செய்தால், டிராக்டர் மாடல் தெரிவு திரை திறக்கும்
- எந்த மாடலுக்குரிய வீடியோ தேவையோ அதை கிளிக் செய்யவேண்டும்
- "மொழியை தேர்வு செய்யுங்கள்" திரையில் விருப்ப மொழியை கிளிக் செய்யுங்கள்
- "வீடியோ" என்ற திரையில் தொடர்புடைய அனைத்து வீடியோக்களையும் பார்க்க வீடியோவை கிளிக் செய்யுங்கள்.



## கையேடுகள்

கையேடுகளை காண கீழ்கண்ட நடைமுறையை பின்பற்ற வேண்டும்-

- முகப்பு பக்கத்தில் பிரோடக்ட் ஃபேப்பை கிளிக் செய்வதன் மூலம் இரண் உப தெரிவுகள் கிடைக்கும்.
- கையேடுகள், டிராக்டர் என்பதை கிளிக் செய்யவேண்டும்
- டிராக்டரை தேர்வு செய்து, கையேடு தேவையான மாடல் எண்ணை கிளிக் செய்யவேண்டும்
- மொழியை கிளிக் செய்வதன் மூலம், தேவையான மொழி தெரிவு செய்யப்படும்
- கையேடுகளை காண, தேவையான கயேடுகளை தேர்வு செய்யுங்கள்.






## அறிவிப்புகள்

அறிவிப்புகளுக்கான ஐகான், திரையில் இடதுபுற மேல்பக்கத்தில் காட்சியளிக்கிறது. நிறுவியவர் அதை கிளிக் செய்து விவரங்களை பார்க்கலாம்.

